பக்கங்கள் 14

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஆவணி 01 வெள்ளிக்கிழமை 18.08.2023 அதிர்வு 18

## மக்கள் பக்கமே ரணில் நிற்பார்

### பந்துல கூறுகின்றார்

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்கள் பக்கமே நின்று தீர்மானங்களை எடுத்து வருகின்றார். அவரின் ஆட்சிக் காலத்தில் மக்களுக்கு நன்மை 04





# குருந்தூர்மலையில் பக்திப் பொங்கல்!

### ஓரணியில் திரண்டு தமிழர்கள் பங்கேற்பு

### குழப்பியடிக்க முயன்ற பிக்கு விரட்டியடிப்பு

### ஏட்டிக்குப் போட்டியாக பௌத்தர்கள் வழிபாடு

நிதர்ஷன்

**முல்லைத்தீவு, குருந்தூர் மலையில் அழிக்கப்பட்ட ஆதிசிவன் ஐயனார் வழிபாட்டிடத்தில் இன்று கடுமையான கட்டுப்பாடுகளின் மத்தியில் பொங்கல் விழா நடைபெற்றது. இதில் தமிழர்கள் பெருமளவில் கலந்துகொண்டனர்.** 04

## பற்றி எரிந்தது ஹோமாகம இரசாயனக் களஞ்சியசாலை! பல மணி நேரப் போராட்டத்தின் பின் தீ கட்டுப்பாட்டில்!!

### இரண்டு கட்டடங்கள் முற்றாக நாசம்



ஹோமாகமவில் கட்டுவன கைத்தொழில் வலயத்தில் உள்ள தொழிற்சாலை ஒன்றின் இரசாயன களஞ்சியசாலை ஒன்றில் ஏற்பட்ட தீப்பரவல் பல மணிநேரத்திற்குப் பின்னர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

நேற்றிரவு 8.30 அளவில் இந்த தொழிற்சாலையின் 04

## எரிந்த தொழிற்சாலையின் சுற்றாடலில் பயணிக்காதீர்!

### வளி மாசடைந்ததால் எச்சரிக்கை

ஹோமாகம, கட்டுவன கைத்தொழில் வலயத்தில் நேற்று ஏற்பட்ட தீ விபத்தில் நாசமான இரசாயன தொழிற்சாலைக்கு சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் இல்லை என மத்திய சுற்றாடல் அதிகார சபை இன்று வெள்ளிக்கிழமை தெரிவித்துள்ளது. 04

### நீர்க் குழியில் வீழ்ந்து மரணமான

## இரண்டு மாணவர்களினதும் ஜனாஸாக்கள் நல்லடக்கம்

வவுனியாவில் நீரில் மூழ்கி மரணமடைந்த இரு மாணவர்களின் ஜனாஸாக்களும் பெருந்திரளானோரின் கண்ணீருக்கு மத்தியில் அடக்கம் இன்று அடக்கம் செய்யப்பட்டன.

வவுனியா வலயமட்ட விளையாட்டுப் போட்டி 04





# மொட்டுக் கட்சியைப் பிளவுபடுத்த ரணில் முயன்றால் விபரீதமாகும்!

## எச்சரிக்கின்றார் ரோஹித அபேகுணவர்தன எம்.பி.



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிளவுப்படுத்த ஜனாதிபதி முயற்சித்தால் அது அரசாங்கத்துக்கு எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தும்.

பொதுஜன பெரமுனவுக்கு எதிரான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுமாயின் அதற்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுப்போம் என ஆளும் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் முன்னாள் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-


ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து விலகி நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் தரப்பினரை ஒன்றிணைத்து புதிய அரசியல் கூட்டணியை உருவாக்கும் அரசியல் காய் நகர்த்தல் ஒன்று இடம்பெறுவதை நன்கு அறிவோம்.

நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படும் தரப்பினருக்கும், பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் எவ்வித தொடர்பும் கிடையாது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து விலகி நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படும் தரப்பினர் புதிய அரசியல் கூட்டணி அமைப்பதால் எமக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது.

பொதுஜன பெரமுனவுக்கு எதிராக கடந்த காலங்களில் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோரை உள்ளடக்கி ஹெலிக்கொப்டர் சின்னத்தில் உருவாக்கப்பட்ட புதிய கூட்டணி காலவோட்டத்தில் காணாமலாக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிளவுப்படுத்த ஜனாதிபதி முயற்சித்தால் அது அரசாங்கத்துக்கு எதிர்மறையான



தாக்கங்களை ஏற்படுத்தும்.

பொதுஜன பெரமுனவின் 134 உறுப்பினர்கள் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தின் கீழ்தான் இன்றும் செயற்படுகிறார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நாங்களே தெரிவு செய்தோம். ஆகவே அவர் பொதுஜன பெரமுனவுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு அரச நிர்வாகத்தை முன்னெடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளோம்.

ஜனாதிபதி தலைமையில் எதிர்வரும் வாரம் இடம்பெறவுள்ள ஆளுங்கட்சி உறுப்பினர் கூட்டத்தின் போது இவ்விடயங்கள் குறித்து பேச்சுக்களில் ஈடுபடுவோம் . - என்றார்.

# 17 பிள்ளைகள், 100 பேரக்குழந்தைகளை கண்ட தாய் பொலனறுவையில் காலமானார்

திம்புலாகலை மலியதேவபுர பிரதேசத்தில் 17 பிள்ளைகளைப் பெற்றெடுத்து 100 பேரக்குழந்தைகளை கண்ட தாயான பூமணி (வயது 88) உயிரிழந்தார்.

பொலனறுவை, திம்புலாகலை, மலியதேவபுரவில் வசிக்கும் அவருக்கு ஏழு மகள்களும் 10 மகன்களும் இருந்தனர்.

அவருக்கு பதின்மூன்றாவது வயதில் திருமணம் நடந்தது. அவர் பெற்ற பதினேழு பிள்ளைகளில் மூன்று பேர் தற்போது இறந்துவிட்டனர்.

திம்புலாகல பரண மில்லனையில்



வசிப்பிடமாக இருந்த பூமணி 75 வருடங்களுக்கு முன்னர் விமலதாச என்பவரை மணந்தார். 1990 ஆம் ஆண்டு கணவர் உயிரிழந்தார்.

திம்புலாகல பரணமில்லன கிராமத்தில் உள்ள தனது சொந்த வீட்டில் பதினேழு குழந்தைகளையும் பெற்றெடுத்த இவர் நீண்ட காலம் மருத்துவச்சியாகவும் பணியாற்றியமை விசேட அம்சமாகும்.

இவரது பிள்ளைகளில் சிலர் இராணுவம், திம்புலாகல உள்ளூராட்சி சபை மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையில் பணிபுரிகின்றனர். ஏனையவர்கள் விவசாயிகள்.

இவரின் இறுதிச்சடங்கு நேற்று முன்தினம்இடம்பெற்றது.






# அடுத்த மாதம் ஜெனிவாக் கூட்டத் தொடர் சமாளிப்பு வேலைகள் இப்போதே ஆரம்பம்

## வெளிநாட்டு இராஜதந்திரிகளை அழைத்து வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி விளக்கம்

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு உட்பட இலங்கை அரசாங்கத்தின் பணிகள் தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, கொழும்பிலுள்ள இராஜதந்திரிகளுக்கு தெளிவுபடுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்சிலின் அமர்வு அடுத்தமாதம் இடம்பெறவுள்ள நிலையில், கொழும்பில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளை அமைச்சர் சந்தித்து விளக்கமளித்துள்ளார். காணாமல்போனோர் விடயம், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்து வெளிவிவகார அமைச்சில் இடம்பெற்ற சந்திப்பில், தான் தெளிவுபடுத்தினார் என அமைச்சர் அலி சப்ரி தனது உத்தியோகப்பூர்வ ட்விட்டர் தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

உத்தேச உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு குறித்து இராஜதந்திரிகளுக்கு எடுத்துரைத்தார் எனவும் அவர்அந்த ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

காணாமல்போனோர் குறித்த அலுவலகம் ஊடாக, காணாமற்போனோர் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்தும் அமைச்சர் இராஜதந்திரிகளுக்கு விளக்கமளித்துள்ளார். வெளிநாட்டு இலங்கையர்களுக்கான உத்தேச அலுவலகத்தை அமைப்பது குறித்தும் அமைச்சர் தெளிவுபடுத்தியுள்ளார்.

பெண்கள் விவகாரம், அமைதி மற்றும் பாதுகாப்பு தொடர்பான தேசிய செயல் திட்டத்தில் ஜனாதிபதி செயலகத்தின் அண்மைய முன்னேற்றங்கள் தொடர்பிலும் தான் வெளிநாட்டு தூதுவர்களுக்கு விளக்கமளித்தார் என வெளிவிவார அமைச்சர் அலி சப்ரி தனது ட்விட்டர் தளத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# பாரவூர்தி மோதித் தள்ளியதில் பொலிஸ் சார்ஜன்ட் உயிரிழப்பு



பாதுக்க இங்கிரிய வீதியில் ஸ்ரீ விஜய போதிராஜா பௌத்த நிலையத்திற்கு அருகில் உள்ள பாலத்தில் நேற்று மாலை பாரவூர்தி ஒன்று மோட்டார் சைக்கிளுடன் மோதிய விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் உயிரிழந்துள்ளார் என இங்கிரிய பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தர் தனது சீருடையுடன் மிரிஹானவில் இருந்து இங்கிரிய நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்த போது பின்னால் வந்த பாரவூர்தி மோட்டார் சைக்கிளை மோதிவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மிரிஹான பிரதி பொலிஸ் மா அதிபர் அலுவலகத்தில் இடம்பெற்ற நிகழ்ச்சியொன்றின் பின்னர் அண்மையில் பிறந்த அவரது குழந்தைக்கு சுகயீனம் ஏற்பட்டுள்ளதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அவர் தனது மனைவி வீடான கலவானைக்கு சென்று கொண்டிருந்த போதே இவ் விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மிருசுவில் பகுதியில் வயோதிபரின் சடலம்

வயோதிபர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

யாழ்., தென்மராட்சி, கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மிருசுவில் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 70 வயதான வயோதிபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வீட்டின் பின்புறமாக நின்ற மாமரத்தில் தூக்கிட்ட நிலையில் அவர் சடலமாகக் காணப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலம் மீட்கப்பட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட நிலையில் மரணம் குறித்த மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**மக்கள் பக்கமே...**

பயக்கும் தீர்மானங்களுக்கு நாம் எப்போதும் ஆதரவு வழங்குவோம்."

– இவ்வாறு நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை விமர்சிப்பவர்கள் முதலில் கண்ணாடிக ளில் தங்கள் முகங்களைப் பார்க்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் தெளிவடைவார்கள்.

அதல பாதாளத்தில் வீழ்ந்த எமது நாட்டை ரணில் அரசு மீட்டு வருகின்றது. அதைக் குழப்பியடிக்கும் விதத்தில் எதிரணிகள் செயற்பட்டு வருகின்றன. ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க மக்கள் பக்கம் நின்று தீர்மானங் களை எடுத்து வருவதால் அவர் வெற்றி யடைந்தே தீருவார்." – என்றார்.

**எரிந்த தொழிற்சாலையின்...**

தீயினால் வளிமண்டலத்தில் சேதம் ஏற்பட்டுள்ள அதேவேளை, கழிவு நீர் சேகரிப்பு சுற்றுப்புற சூழலுக்கும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக அதிகார சபையின் ஊடகப் பேச்சாளர் அஜித் வீரசுந்தர இன்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

கடந்த டிசெம்பர் மாதம் முதல் இயங்கி வரும் இரசாயன தொழிற்சாலைக்கு தேவையான ஆவணங்களை பெற்றுக் கொள்ளாமைக்கு கட்டுவன கைத்தொழில் வலய நிர்வாகம் பொறுப்பேற்க வேண்டும் என வீரசுந்தர மேலும் தெரிவித்ததாக அட தெரண தெரிவித்துள்ளது.

இதேவேளை, தீயால் வளி மாசடைந் துள்ளது, எனவே இரசாயனத் தொழிற் சாலையைச் சூழவுள்ள பகுதிகளிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் பய ணிப்பதை தவிர்க்குமாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட் சகர் நிஹால் தல்துவ பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஹோமாகம, கட்டுவான கைத்தொழில் வலயத்திலுள்ள இரசாயன தொழிற்சாலை யில் நேற்று மாலை ஏற்பட்ட தீயை அணைக்க ஏழு தீயணைப்பு வாகனங் கள் அனுப்பிவைக்கப்பட்டன.

ராணுவம் மற்றும் காவல்துறையி னரின் கூட்டு முயற்சியால் தீ அணைக்கப் பட்டது.

**பற்றி எரிந்தது...**

இராசாயன களஞ்சியசாலையில் ஏற்பட்ட தீப்பரவல் இன்று அதிகாலை 3.30அளவில்கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது என பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

தீயை கட்டுப்படுத்தும் பணிகளில் 7 தீயணைப்பு வாகனங்கள் ஈடுபடுத் தப்பட்டன.

கொழும்பு கோட்டை நகரசபையின் தீயணைப்புப் பிரிவினரும் ஹொரணை நகரசபையின் தீயணைப்புப் பிரிவினரும் இந்தப் பணிகளில் ஈடுபட்டனர்.

அத்துடன் தீப்பரவலை கட்டுப்படுத்த இராணுவத்தின் உதவியும் பெற்றுக் கொள்ளப்பட்டது.

இந்தத் தீ விபத்தினால், தொழிற்சாலை யின் இரண்டு கட்டடங்களும் முற்றாக சேதமடைந்துள்ளன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்காரணமாக, இந்தச் பிரதே சத்தை அண்மித்த பகுதிகளில் வளி மாசடந்துள்ளமையால், முகக் கசவங் களை அணியுமாறு பொதுமக்களிடம் கோரப்பட்டுள்ளது.

தீப்பரவல் ஏற்பட்டமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. அது தொடர்பான விசாரணைகளை பொலி ஸார் ஆரம்பித்துள்ளனர்.

**இரண்டு மாணவர்களினதும்...**

பம்பைமடுவில் அமைந்துள்ள வவு னியா பல்கலைக் கழக மைதானத்தில் நேற்று நடைபெற்ற போது மைதானத் தின் அருகில் இருந்த நீர்க் குழியில் விழுந்த வவுனியா முஸ்லிம் மகா வித்தி யாலத்தைச் சேர்ந்த 15 மற்றும் 14 வயது டைய இரு மாணவர்கள் மரணமடைந் திருந்தனர்.

இரு மாணவர்களின் ஜனசாக்களும் பட்டாணிச்சூர் பள்ளியில் அஞ்சலிக்காக வைகப்பட்டு பட்டாணிச்சூர் மையவாடியில் அடக்கம் செய்யப்பட்டன.

இதன்போது, முன்னாள் அமைச்சரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பி னரும் அகில இலங்கை மக்கள் காங்கி ரஸின் தலைவருமான ரிஷாத் பதியு தீன், வலயக்கல்வி திணைக்களத்தினர், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். பலர தும் கண்ணீருக்கு மத்தியில் இருவரது சடலங்களும் நல்லடக்கம் செய்யப்பட் டன.

**குறுந்தூர் மலையில்...**

பொங்கல் விழாவைக் குழப்பியடிக்க முயன்ற 'குருந்தி விகாரை' பௌத்த பிக்குவையும் தமிழர்கள் அங்கிருந்து விரட்டியடித்தனர்.

இந்த பொங்கல் நிகழ்வுக்குப் பௌத்த பிக்குகள் மற்றும் யாழில் இயங்கும் அருண் சித்தார்த் கும்பல் இடையூறு விளைவிக்கலாமென்பதால், பொங்கலுக்குப் பொலிஸார் தடையுத் தரவு கோரியிருந்தனர். எனினும், அதற்கு இணங்காத முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம், அந்தத் தரப்பினரிடம் இருந்து பிரச்சினை எதுவும் வாராதபடி கட்ட ளையும் பிறப்பித்திருந்தது.

இன்றைய பொங்கல் நிகழ்வு, தொல் லியல் திணைக்களம் பிறப்பித்த கடுமையான கட்டுப்பாடுகளின்படி நடை பெற்றது. நிலத்தில் கல் வைத்து, அதன் மேல் தகரம் வைத்து, அதன் மேல் அடுப்பு அமைக்கப்பட்டு பொங்கப்பட்டது.

இதன்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர், தனியாகப் பொங்கல் செய்வதற்கான ஏற்பாடுகளுடன் வந்தி ருந்தனர். அவர்கள் இன்னொரு அடுப்பு அமைக்க முற்பட்ட போது, தொல் பொருள்திணைக்களம்அதற்குஅனுமதிய ளிக்கவில்லை. எத்தனை அடுப்பு அமைக்க லாம் என நீதிமன்றக் கட்டளையெதுவும் பிறப்பிக்கப்படாத போதிலும், ஒரு அடுப் பிலேயே பொங்க தொல்லியல் திணைக் களம் அனுமதி வழங்கியது.

அதனால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினருக்கும், தொல்லியல் திணைக்களத்தினருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. பின்னர் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் அங்கி ருந்து புறப்பட்டு விட்டனர்.

தமிழர்கள் அமைதியாகப் பொங்கல் வழிபாட்டில் ஈடுபட்டிருந்தபோது திடீரென அந்தப் பகுதிக்குள் 'குருந்தி விகாரை' பௌத்த பிக்கு நுழைந்து குழப்பத்தை ஏற்படுத்த முயன்றார். இதனால் அங்கு சில நிமிடங்கள் பதற்ற நிலை ஏற்பட்டது.

எனினும், குறித்த பௌத்த பிக்குவுக்கு எதிராகப் பொங்கல் விழாவில் கலந்து கொண்ட தமிழர்கள் கோஷமிட்டு அவரை அங்கிருந்து விரட்டியடித்தனர். அவர் அங்கிருந்து பாதுகாப்பாக வெளியேறப் பொலிஸார் ஒத்துழைப்பு வழங்கினர்.

தமிழர்களும் அங்கு அமைதியாகப் பொங்கல் விழாவை நடத்திவிட்டு அங்கி ருந்து திரும்பினர்.

இதேவேளை, நேற்று இரவும் இன்று காலையும் குருந்தூர்மலையிலுள்ள 'குருந்தி விகாரை'க்குத் தென்னிலங்கை யில் இருந்து வாகனங்களில் வந்திறங் கிய நூற்றுக்கணக்கான பௌத்த மக்கள் மற்றும் பௌத்த பிக்குகள் இணைந்து வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

# மின் உற்பத்தி நீர்த்தேக்கங்களில் கொள்ளளவு பெருமளவில் குறைவு

மின் உற்பத்தி நிலையங்களுடன் தொடர்புடைய நீர்த்தேக்கங்களின் கொள்ளளவு தற்போது 23 சத வீதமாக குறைந்துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

ரந்தெனிகலவின் கொள்ளளவு 8.1 சதவீதமாகவும் விக்டோரியா நீர்த் தேக்கத்தின் கொள்ளளவு 27 சத வீதமாகவும் குறைந்துள்ளது.

சமனல ஏரி நீர்த்தேக்கத்தின் கொள்ளளவும் மொத்த கொள்ளளவு 1.9 சதவீதமாக குறைந்துள்ளது.

இத்தகைய நிலைமைகளின் கீழ், இந்த நாட்டின் மின்சாரத் தேவையில் 80 சதவீதம் நிலக்கரி மற்றும் அனல் மின்சாரம் மூலம் வழங்கப்படுகிறது.

இதேவேளை, 100 மெகாவோட் மின் சாரத்தை 6 மாத காலத்துக்கு கொள் வனவு செய்வதற்கு இலங்கை மின் சார சபைக்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனு– மதி வழங்கியுள்ளது.



# தனியாரிடமிருந்து 100 மெகாவாட் மின்சாரம் ஆறு மாதத்துக்கு கொள்வனவு செய்ய அனுமதி

தடையின்றிய மின்சார விநியோகத்தை முன்னெடுப்பதற்கு எதிர்வரும் ஆறு மாத காலத்துக்கு 100 மெகாவாட் மின்சாரத்தை வெளியில் தனியார் தரப்பினரிடமிருந்து கொள்வனவு செய்ய மூன்று நிபந்தனைகளின் அடிப்படையில் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

2009ஆம் ஆண்டு 20ஆம் இலக்க இலங்கை மின்சார சட்டத்தின் 43ஆவது பிரிவின் கீழ் இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. 3 முக்கிய நிபந்தனைகளின் கீழ் இன்று (18) முதல் எதிர்வரும் 6 மாத காலத்துக்கு மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த மின்சாரக் கொள்முதல் சிறப்புத் தகுதியின் அடிப்படையில் செய்யப்பட வேண்டும்.மற்றும் மின்சார கொள்முதல் ஒப்பந்த காலத்தின் முடிவில் கொள்முதல் பற்றிய சுயாதீன தணிக்கை செய்யப்பட வேண்டும். கொத்மலை பொல்பிட்டிய 220 கே.வி பாதை 2024ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் செயல்படுத்தப்பட வேண்டும், இந்த மின்சாரத்தை குறைந்தபட்ச விலையின் அடிப்படையில் கொள்வனவு செய்ய வேண்டும் என்ற மூன்று நிபந்தனைகளின் அடிப்படையில் இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நாட்டில் வறட்சியான காலநிலை நிலவுகின்ற நிலையில் விவசாயத்துக்கு மேலதிகமான நீரை விநியோகிக்க வேண்டுமாயின், எதிர்வரும் நான்கு முதல் ஆறு மாத காலத்துக்கு மேலதிகமாக மின்சாரத்தை கொள்வனவு செய்ய வேண்டும் என மின்சாரத் துறை அமைச்சர் கஞ்சன விஜேசேகரஅமைச்சர்சமர்ப்பித்தயோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

மேலதிக மின்சார கொள்வனவு தொடர்பில் மின்சார சபை முன்வைத்த யோசனையை பரிசீலனை செய்த இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மூன்று நிபந்தனைகளின் அடிப்படையில் குறுகிய காலத்துக்கு தனியார் தரப்பினரிடமிருந்து மின்சாரத்தை கொள்வனவு செய்ய அனுமதி வழங்கியுள்ளது.

வறட்சியான காலநிலைக்கு மத்தியில் விவசாய நடவடிக்கைகளுக்கு தேவையான நீரை விநியோகிப்பதற்கும், மின்சாரத்தை தடையின்றி விநியோகிப்பதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 06 மாத காலத்துக்கு தேவையான மேலதிக மின் கொள்வனவுக்காக ஐந்நூறு கோடி ரூபா மேலதிகமாக செலவாகும் என மின்சார சபை குறிப்பிட்டுள்ளது.

# சித்தானைக்குட்டிச் சித்தரின் குருபீடம் அக்கரைப்பற்று பனங்காட்டில் அமையும்

## அடிக்கல் நாட்டுவிழா இன்று இடம்பெற்றது





(வடிவேல் டினேஸ்)

சுவாமி ஸ்ரீ சித்தானைக்குட்டி சித்தரின் குருபீடம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டுவிழா இன்று அக்கரைப்பற்று அருள்மிகு பனங்காடு மாதுமை உடனுறை சமேத ஸ்ரீ பாசுபதேசுவரர் தேவஸ்தானத்தில் இடம் பெற்றது.

இந்தியாவின் இராமநாதபுர மாவட்டத்தில் இருந்து இலங்கைக்கு வந்து சைவசமயத்தின் வளர்ச்சிக்கு அளப்பெரும் பங்காற்றிய முப்பெரும் சித்தர்களின் முதன்மையானவர் காரைதீவில் ஜீவசமாதி கொண்ட சுவாமி ஸ்ரீ சித்தானைக்குட்டி சித்தர் ஆவார்.

சித்தர் சித்தானை குட்டி சுவாமி அக்கரைப்பற்று கோளாவில், பனங்காடு பகுதிகளில் அவர் வாழ்ந்த காலத்தில் பல சித்து விளையாட்டுக்களை காட்டிய வரலாறுகளும் உண்டு.

தற்போது சுவாமியின் ஜீவசமாதி காரைதீவில் சித்தானை குட்டிபுரத்தில் அமைந்துள்ள சித்தர் ஆலயத்தில் அமையப்பெற்றுள்ளது.அங்கு வருடா வருடம் சித்தர் குருபூசை இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பனங்காட்டில் சித்தானைக்குட்டி சித்தர் குருபீட அடிக்கல் நாட்டு விழா இன்று இடம் பெற்றது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## பெரமுனவின் துரதிர்ஷ்டம்

தன் தலையில் தானே மண் அள்ளிப் போட்டுக் கொண்ட நிலைமை பொதுஜனப் பெரமுனவுக்கு.

தான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்த ரணில் விக்கிரமசிங்கவிடம் இருந்தே தனக்கு எதிரான ஆப்பை எதிர்நோக்கும் இக்கட்டு அதற்கு.

ஒன்றுபட்டு நின்று தன்னை ஜனாதிபதியாக்கிய பொதுஜன பெரமுனவையே பிளந்து, தனக்கென தனித்து ஒரு கூட்டணியை ஆரம்பிக்கும் சாணக்கிய வேலையை தொடங்கிவிட்டார் ரணில் விக்கிரமசிங்க. அது வெளிப்படையானது. தீட்டிய மரத்தில் கூர் பார்க்கும் வேலை இது.

இந்த முயற்சியின் அரசியல் சூட்டை - வெப்பியாரத்தை - தாங்க முடியாது மொட்டுக் கட்சியின் பிரமுகர்கள் இப்போது பொதுவெளியில் அரற்றத் தொடங்கி இருக்கிறார்கள்.

“ஸ்ரீலங்கா பொதுஜனப் பெரமுனவைப் பிளவுபடுத்த ஜனாதிபதி முயற்சித்தால் அது அரசாங்கத்துக்கு எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தும். பொதுஜன பெரமுனவுக்கு எதிரான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுமாயின் அதற்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுப்போம்” - என ஆளும் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் முன்னாள் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன சீறியிருக்கின்றார்.

“ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து விலகி நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படும் தரப்பினரை ஒன்றிணைத்துப் புதிய அரசியல் கூட்டணியை உருவாக்கும் அரசியல் காய் நகர்த்தல் ஒன்று இடம்பெறுவதை நாம் நன்கு அறிவோம். அது நடக்கட்டும்.

“நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் தரப்பினருக்கும், பொதுஜனப் பெரமுனவுக்கும் இடையில் எவ்வித தொடர்பும் கிடையாது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து விலகி நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படும் தரப்பினர் புதிய அரசியல் கூட்டணி அமைப்பதால் எமக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது.

“ஆனால், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிளவுப்படுத்த ஜனாதிபதி முயற்சித்தால் அது அரசாங்கத்துக்கு எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தும்.

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நாங்களே தெரிவு செய்தோம். ஆகவே அவர் பொதுஜன பெரமுனவுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு அரச நிர்வாகத்தை முன்னெடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளோம்.” - என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஆனால் காலம் மலையேறி விட்டது . ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பிளந்தே பொதுஜனப் பெரமுனவை உருவாக்கினார்கள் ராஜபக்ஷக்கள். இப்போது அவர்களின் கண்முன்னாலேயே பொதுஜனப் பெரமுனவை பிளந்து, தமக்கான புதிய கூட்டணி ஒன்றை தோற்றுவிக்கின்றார் ரணில்.

உருவான விதத்திலேயே மொட்டுக் கட்சி உருக்குலைந்து போவதுதான் அதன் பரிதாப நிலைமையாகும்.

அதுவும் தான் ஒற்றுமையாக நின்று ஜனாதிபதியாகத் தெரிவு செய்து, பதவிக்கும் அதிகாரத்துக்கும் கொண்டு வந்த ரணில் விக்கிரமசிங்கவினாலேயே பொதுஜன பெரமுன பிளக்கப்படுவது அதன் துரதிஷ்டமாகும்.

# அமெரிக்காவின் பிரதிநிதி இலங்கைக்கு வருகின்றார்



அமெரிக்காவின் இணைய வெளி மற்றும் டிஜிட்டல் கொள்கைக்கான தூதுவர் நதானியேல் சி.ஃபிக் (Nathaniel C.Fick) உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு எதிர்வரும் 20 ஆம் திகதி (நாளை மறுதினம்) இலங்கைக்கு வருகை தரவுள்ளார் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இல்ச்ங்கைக்கு வருகை தரும் அவர் அரச மற்றும் தனியார் துறையின் பிரதிநிதிகளுடன் சந்திப்பில் ஈடுபடவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இணைய பாதுகாப்பு, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பங்கள் மற்றும் டிஜிட்டல் சுதந்திரம் என்பன தொடர்பில் கொழும்பில் இருதரப்பு கலந்துரையாடல்களை அவர் முன்னெடுக்கவுள்ளார் எனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பெங்களூரில் நடைபெறும் பு -20 டிஜிட்டல் பொருளாதார கூட்டத்தில் அமெரிக்க தலைமை பிரதிநிதியாக கலந்துகொள்வதற்காக இன்று அவர் இந்தியா செல்கின்றார். எதிர்வரும் 20 ஆம் திகதி வரை அவர் இந்தியாவில் தங்கியிருப்பார். அதன் பின்னர் 20 ஆம் திகதி இலங்கைக்கு வருகை தரும் அவர் 23 ஆம் திகதி வரை இங்கு தங்கியிருப்பார் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

# அத்தியாவசிய சேவைகள் பற்றிய வர்த்தமானி அறிவித்தல் மீண்டும்




மின்சாரம், கனியவளம் மற்றும் வைத்தியசாலைகள் என்பனவற்றை அத்தியாவசிய சேவைகளாக அறிவித்து மீண்டும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கு அமைய, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவினால் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, மின்சார விநியோகம் தொடர்புடைய சகல சேவைகளும், கனியவள உற்பத்தி மற்றும் எரிபொருள் வழங்கல், விநியோகம் அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், வைத்தியசாலைகள், மருந்தகங்கள், நோயாளர்களின் பராமரிப்பு மற்றும் சிகிச்சை அளித்தல் என்பன அத்தியாவசிய சேவைகளாக அறிவித்து இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

# குருந்தூர் மலையில் பொங்கல்...




படங்கள் : நிதர்ஷன்









# குருந்தூர் மலையில் பொங்கல்...

















படங்கள் : நிதர்ஷன்









# நீர்க்கட்டண அதிகரிப்பு தற்காலிகமானதுதான்!

## அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு

“தற்போதைய நீர்க்கட்டண அதிகரிப்பு தற்காலிகமானது. நிரந்தரமான விலைசூத்திரமொன்று எதிர்வரும் டிசெம்பரில் அறிமுகப்படுத்தப்படும். அது மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அமையும்.” என நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

கொழும்பு அமைச்சில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

மின்சார கட்டணம் 66 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. எம்மிடம் உள்ள 324 நீர் உற்பத்தி நிலையங்களில் 2 சதவீதம் தான் சூரிய சக்தியில் (சோலார்) செயற்படுகின்றது. ஏனையவை அனைத்தும் மின்சாரத்தில்தான் இயங்குகின்றன. எனவே, மின் கட்டணம் ஒரு வீதத்தால் அதிகரித்தால் கூட நீர் கட்டணத்தையும் அதிகரிக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.

இன்று குடிதண்ணீர் பற்றிப் பலர் கதைத்தாலும் அதன் பின்னால் உள்ள செயற்பாட்டுப் பொறிமுறை பலருக்குத் தெரியாது. கடந்த காலங்களில் அரசியல் ரீதியிலான முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. வாக்கு வேட்டைக்காக என்னால் அவ்வாறான முடிவுகள் எடுக்க முடியாது. அவ்வாறு எடுத்தால் அது அடுத்த தலைமுறைக்கே பாதிப்பாக அமையும்.

நீர்க் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு எமக்குப் புரிகின்றது. அஸ்வெசும, சமுர்த்தி பயனாளிகளுக்கு அதிகரிப்பு கிடையாது.

நீருக்கான நிரந்தர விலைக் கட்டண சூத்திரம் டிசம்பரில் அறிமுகப்படுத்தப்படும். தற்போதைய செலவுகளை விட, செலவுகளை குறைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்க முடியும் என நம்புகின்றோம். ஏனெனில் மின்சார விலையை குறைப்பது பற்றியும் ஆராயப்பட்டு வருகின்றது. 4 மாதங்களுக்கு மக்களுக்கு சுமை இல்லாத வகையில் எம்மால் தீர்மானமொன்றை வழங்க முடியும். – என்றார்.

# சு.கவின் ஆண்டு விழா கொழும்பில் நடக்கும்



குருநாகல் – பண்டுவஸ்நுவரவில் அடுத்த மாதம் 2ஆம் திகதி நடத்த திட்டமிட்டிருந்த ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் 72ஆவது வருடப் பூர்த்தியை கொழும்பில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன கட்சியின் தொகுதி மற்றும் மாவட்ட அமைப்பாளர்களுக்கு நேற்று கடிதம் மூலம் இதனை அறிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக குறித்த நிகழ்வில் பொதுமக்கள் பங்கேற்பதில் நிதி நெருக்கடிகள் உள்ளன.

அத்தோடு இதுபோன்ற பாரியளவான நிகழ்வுகள் தற்போது நடத்துவது ஏற்புடையதல்ல என மைத்திரிபால சிறிசேன, மாவட்ட மற்றும் தொகுதி அமைப்பாளர்களுக்கு அனுப்பி வைத்துள்ள கடித்தத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில், ஸ்ரீஜயவர்தனபுர கோட்டையில் உள்ள விருந்தகம் ஒன்றில் குறித்த நிகழ்வை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# இடமாற்ற உத்தரவுகளுக்கு ஒழுகாத ஆசிரியர்களின் சம்பளம் நிறுத்தப்படும்

## கல்வி அமைச்சு திட்டவட்டமாகத் தெரிவிப்பு

இடமாற்ற உத்தரவை நடைமுறைப்படுத்தாத ஆசிரியர்களின் சம்பளம் இடைநிறுத்தப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இடமாற்ற உத்தரவுக்கு அமைய செயற்படுமாறு ஆசிரியர்களுக்கு பல முறை அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தரவுகளை பொருட்படுத்தாமல் இடமாற்றம் வழங்கப்பட்ட ஆசிரியர்கள் முன்பு இருந்த பாடசாலைகளிலேயே சேவை புரிகின்றனர் என முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

சேவையின் தேவையின் காரணமாக சில ஆசிரியர்களை தற்போதுள்ள பாடசாலைகளில் தக்கவைத்துக் கொள்ளுமாறு அதிபர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பற்றாக்குறை உள்ள பாடசாலைகளுக்கு மேலதிக ஆசிரியர்களை நியமிக்கும் வேலைத்திட்டம் உள்ளதாகவும் கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.



# பெண்களை இழிவுபடுத்தும் வார்த்தைகள் நீக்கம்: இந்திய உயர் நீதிமன்றம் அதிரடித் தீர்மானம்!

இந்திய உயர்நீதிமன்றத்தின் புதிய கையேட்டின்படி பெண்களைக் குறிப்பிடும் வார்த்தைகள் சிலவற்றிற்கு பதிலாக வேறு வார்த்தைகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

சமுதாயத்தில் பெண்களை இழிவுபடுத்தும் விதமாக அதிகமான வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதில் சில வார்த்தைகள் நீதிமன்றங்களின் நடைமுறையில் கூட பயன்பாட்டில் உள்ளன.

இந்தநிலையில் இது போன்ற வார்த்தைகளுக்கு உயர்நீதிமன்றம் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. அதன்படி, 40 வார்த்தைகளுக்கு பதில், புதிய வார்த்தைகள் அடங்கிய கையேடு புத்தகத்தை உயர்நீதிமன்ற தலைமை நீதியரசர் சந்திரசூட் வெளியிட்டுள்ளார்.

இதன்படி 'தவறிழைத்த பெண்', 'முறை தவறிய பெண்'களை பொதுவான வார்த்தையாக பெண் என்றே குறிப்பிட வேண்டும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.



'விபசாரி' என்ற வார்த்தைக்கு பதிலாக பாலியல் தொழிலாளி என்றும், கள்ள உறவில் ஈடுபட்ட பெண்' என்பதை திருமணத்திற்கு வெளியே உடலுறவில் ஈடுபட்ட பெண்' என்றும், தகாத உறவு' என்பதை திருமணத்தை மீறிய உறவு' என்றும் அழைக்க வேண்டும்.

வல்லுறவை 'பலாத்காரம்' என்றும் குறிப்பிடவேண்டும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

குடும்பப் பெண் என்ற ஹவுஸ்வொயிப்' என்பதை ஹோம் மேக்கர்' என்றும், 'முதிர்கன்னி' என்பதை திருமணமாகாதவர்' என்றும், சோம்பேறி' என்பதை வேலை இல்லாதவர் என்றும், திருமணமாகாமல் தாயானவரை தாய் என்றே அழைக்கவேண்டும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நரேந்திர மோடி ஆட்சி பலவீனமானது: மீனவர் மாநாட்டில் ஸ்டாலின் சாடல்!



பிரதமர் மோடி ஆட்சியிலும் மீனவர்கள் மீதான தாக்குதல் தொடரவேச் செய்கிறது என்றால் என்ன அர்த்தம்? மோடி ஆட்சி பலவீனமான ஆட்சி என்று அர்த்தம்" என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் பகுதியில் மீனவர் நல மாநாடு இன்று நடைபெற்றது. இந்த மாநாட்டில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு, 9 ஆயிரத்து 615 பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இதன்போது முதல்வர் மு.க.ஸ்டாலின் உரையாற்றுகையில்,

மாநிலத்துக்குள் இருக்கும் மீனவர்கள் சந்திக்கும் பிரச்சினைகளை நாங்கள் நிறைவேற்றுகிறோம். ஆனால், கடலுக்குள் செல்லும் மீனவர்கள் சந்திக்கும் பிரச்சினைகள் இன்னும் பிரச்சினையாகவே இருக்கிறது. தமிழகத்தைச் சேர்ந்த மீனவர்கள் இலங்கை கடற்படையால், தொடர்ந்து தாக்கப்படுவதையும், கைது செய்யப்படுவதையும், இந்த மாநாடு வன்மையாக கண்டிக்கிறது. இது தமிழக மீனவர்களுக்கு இருக்கக்கூடிய தீராத பிரச்சினையாக இது இருந்து வருகிறது.

இலங்கையில் தமிழர்களின் உரிமைப் போராட்டம் எப்போது துவங்கியதோ, அப்போதிலிருந்தே தமிழக மீனவர்களைத் தாக்குவதை இலங்கை அரசு வழக்கமாகக் கொண்டுள்ளது. அதன்பிறகாவது தமிழக மீனவர்கள் நிம்மதியாக மீன்பிடிக்க முடிகிறதா என்றால், அதுவும் இல்லை. அதே கைது, தாக்குதல், சித்ரவதை தொடரத்தான் செய்கிறது. அதிலும் குறிப்பாக 2014 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் இடம்பெற்றது. பா.ஜ.க. ஆட்சி அமைந்த பிறகுதான் அடக்குமுறைகள் இன்னும் அதிகமாகியிருக்கிறது.

மீனவர்கள் கைது, தாக்குதல், சிறைச்சாலை என்பதை தாண்டி, மீனவர்களினுடைய பல லட்சம் ரூபாய் மதிப்பிலான படகுகள் அந்த படகுகளை இலங்கை அரசாங்கம் பறித்துச் செல்வது அதிகமாகியிருக்கிறது.

மீனவர்களை விடுவித்தாலும் படகுகளை தருவதில்லை. மீனவர்களுக்கு வாழ்வாதாரமே படகும் வலையும்தான். படகுகளை உடைப்பதும், வலைகளை அறுப்பதும் இலங்கை அரசின் வழக்கமாக உள்ளது.

இத்தகைய படகுகள் இலங்கை அரசின் உடைமையாகும் என்று சொல்லுமளவுக்கு இப்போது நிலைமை இன்னும் மோசமாகியிருக்கிறது என்று தெரிவித்துள்ளார்.

## மணிப்பூரில் வன்முறை: 3 பேர் கொலை!

மணிப்பூர் மாநிலத்தின் மலை கிராமம் ஒன்றில் ஆயுதம் தாங்கிய கும்பல் ஒன்றால் குகி சமூகத்தைச் சேர்ந்த மூன்று பேர் சுட்டுக்கொல்லப் பட்டுள்ளனர்.

நாகா பழங்குடினரான தாங்குல்ஸ் ஆதிக்கம் செலுத்தும், உக்ருல் மாவட்டத்தின் தலைநகரில் இருந்து 47 கிலோ மீற்றர் தொலைவில் இருக்கும் குகி பழங்குடியினர் வசிக்கும் தவுவாய் குகி கிராமத்தில் இன்று அதிகாலை 4:30 மணிக்கு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதுகுறித்து உக்ருல் மாவட்ட பொலிஸ் கண்காணிப்பாளர் என்.வஷூம் கருத்து தெரிவிக்கையில், எங்களுக்கு கிடைத்த தகவலின்படி, ஆயுதம் ஏந்திய கும்பல் ஒன்று கிரமாத்தின் கிழக்கேயுள்ள மலைப்பகுதியில் இருந்து இறங்கி கிராமத்தை நெருங்கி கிராமக் காவலர்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டுள்ளனர். இந்தச் சம்பவத்தில் 3 பேர் பலியாகியுள்ளனர். காயம் அடைந்தவர்கள் பற்றிய விவரங்கள் இல்லை.

இதனைத் தொடர்ந்து பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. மாநில பொலிஸாரும், இந்திய இராணுவமும் இணைந்து, இந்தச் சம்பவத்தில் தொடர்புடையவர்களைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ளார்.

# கனடாவில் ஏற்பட்ட காட்டுத் தீயினால் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதிப்பு!





கனடாவின் வடக்கில் உள்ள மிகப்பெரிய நகரங்களில் ஒன்றான யெல்லோவ்நைஃப் பகுதியில் ஏற்பட்ட காட்டுத்தீயினால் ஆயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதியை விட்டு வெளியேறியுள்ள ஆயிரக்கணக்கான மக்கள், உள்ளூர் விமான நிலையத்திலும் நகருக்கு வெளியே உள்ள வீதிகளில், குவிந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

நூற்றுக்கணக்கானோர் அவசர இராணுவ வெளியேற்ற விமானங்களுக்காக அணிவகுத்துள்ளனர் என சர்வதேச ஊடக தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடமேற்கு பிரதேசங்களில் உள்ள யெல்லோவ்நைஃப் பகுதியில் வசிக்கும் 20 ஆயிரம் பேரை அங்கிருந்து வெளியேறுமாறு நேற்றிரவு அதிகாரிகள் அறிவுறுத்தியிருந்தனர்.

நேற்றைய தினம் வரை, குறித்த நகரத்திலிருந்து 16 கிலோமீற்றர் தொலைவில் காட்டுத்தீ பரவியுள்ளது.

சுமார் 240 காட்டுத்தீ சம்பவங்கள் அங்கு பதிவாகியுள்ளதுடன் அங்கு அவசரகால நிலைமை அறிவிக்கப்பட்டுள்ளது.



# ஹவாய் காட்டு தீ: 111 பேர் பலி!

அமெரிக்காவின் ஹவாய் தீவுகளில் காட்டு தீ பரவல் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 111 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், மவுயி தீவில் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் காணாமல் போய் உள்ளனர் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கடற்கரை நகரான லஹைனாவின் 80 சதவீதமான பகுதிகள் தீயினால் சேதமடைந்துள்ளன என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

காட்டுத்தீ பரவியுள்ள பகுதிகளில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டது.

குறித்த காட்டுத்தீ காரணமாக 25 ஆயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட நிலங்கள் தீயில் கருகி நாசமாகின.

குறித்த பிரதேசத்தில் கடுமையான புயல் வீசுவதனால் காட்டு தீ தொடர்ந்தும் புதிய பிரதேசங்களுக்கும் பரவி வருகிறது என சர்வதேச தகவல்கள் தெரிவிக்கின்றன.

# மலேசியா விமான விபத்திற்கு முன்னர் தாயிடம் விமானி தெரிவித்த கருத்து!



மலேசியாவின் மத்திய செலான்கூர் மாநிலத்தில் சிறியரக விமானம் ஒன்று நேற்று விபத்துக்குள்ளானதில் 10 பேர் உயிரிழந்திருந்தனர்.

இந்த விபத்துக்கு சில மணி நேரங்களுக்கு முன்னர் விமானி ஒருவர் இறுதியாக தெரிவித்த கருத்து அனைவரையும் நெகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

இந்த விமானத்தின் விமானியாக ஷருல் கமல் என்பவர் செயற்பட்டுள்ளார்.

விமானம் புறப்படுவதற்கு முன்னதாக அவர் தனது தாயுடன் சில நிமிடங்கள் உரையாடியுள்ளார்.

இதன்போது வழமைக்கு மாறாக அம்மாவுடன் அதிக அன்புடன் உரையாடியதுடன், தாயுடன் நீண்ட காலம் வசிக்க விரும்புகிறேன் எனவும் தனது கருத்துக்களை பகிர்ந்துக்கொண்டுள்ளார்.

அத்துடன், விமானத்திற்கு செல்வதற்கு முன்னர் ‘ஐ லவ் யு சோ மச் மமா’ என தெரிவித்துவிட்டு சென்றுள்ளார்.

குறித்த விமானியின் தாய் அன்பு அனைவரையும் நெகிழச் செய்துள்ளதுடன் கண்ணீர் சிந்தவும் வைத்துள்ளது.

இந்த நிலையில் குறித்த விமானத்தில் பயணித்த 8 பேரும் விமானம் விபத்துக்குள்ளான பகுதியில் இருந்த இருவருமாக 10 பேர் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

விமானத்தில் இரண்டு விமானிகளும் 6 பயணிகளும் பயணித்துள்ளனர்.

அதேநேரம் விமானம் விபத்துக்குள்ளானமைக்கான காரணம் இது வரையில் கண்டறியப்படவில்லை.

சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என மலேசியாவின் சிவில் விமானப் போக்கு வரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# இனங்களுக்கு இடையில் மீண்டும் இன முரண்பாட்டை ஏற்படுத்த ஒரு தரப்பு முயற்சி என்கிறார் சரத் வீரசேகரா



முல்லைத்தீவு குருந்தூர் விகாரையில் உள்ள பௌத்த மத புரதான சின்னங்கள் தமிழ் அரசியல்வாதிகளின் ஆதரவுடன் அழிக்கப்பட்டுள் ளன என நாடாளுமன்ற உறுப்பினரான சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

குருந்தூர் மலையில் இன்று (18) இடம்பெறவிருந்த பொங்கல் வழிப்பாடு தொடர்பில் வினவிய போதே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில் –

"குருந்தூர் மலை விவகாரத்தை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெறும் இனமுரண்பாட்டை தடுக்க அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதை நீதியமைச்சரிடம் வலியுறுத்தியுள்ளேன்.

தொல்பொருள் மரபுரிமைகளை முன்னிலைப்படுத்தி தோற்றம் பெற்றுள்ள இருதரப்பு முரண்பாடுகள் குறித்து தேசிய பாதுகாப்பு தொடர்பான நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வை குழுவில் ஆராய எதிர்பார்த்துள்ளேன்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள பௌத்த மரபுரிமைகளை அழிப்பதற்கு ஒரு தரப்பினர் திட்டமிட்ட வகையில் செயற்படுகின்றனர்.

குருந்தூர் மலையில் இந்து மத வழிபாடுகளில் ஈடுபடலாம் என முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி அனுமதி வழங்கியமை குறித்து நீதிச்சேவை ஆணைக்குழுவின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளவுள்ளோம்.

குருந்தூர்மலையில் மத வழிபாடுகளில் ஈடுபடும் போது முரண்பாடுகள் தோற்றம் பெறலாம் என முல்லைத்தீவு பொலிஸார் நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்கள்.

குருந்தூர்மலையில் இந்து வழிபாடுகள் இன்று இடம்பெறவுள்ள நிலையில் கொழும்பில் இருந்து 500 இற்கும் அதிகமான சிங்களவர்கள் குருந்தூர் மலைக்குச் செல்ல உள்ளனர்.

இருதரப்பினருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஊடாக முரண்பாடுகள் தோற்றம் பெறலாம். குருந்தூர் மலை விவகாரத்தை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெறும் இனமுரண்பாட்டை தடுக்க அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதை நீதியமைச்சரிடம் வலியுறுத்தியுள்ளேன்.

நாட்டில் இனங்களுக்கு இடையில் மீண்டும் இன முரண்பாட்டை தோற்றுவிக்க ஒரு தரப்பினர் முயற்சிக்கிறார்களா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தொல்பொருள் மரபுகளை முன்னிலைப்படுத்தி தோற்றம் பெற்றுள்ள முரண்பாடுகள் குறித்து தேசிய பாதுகாப்பு தொடர்பான நாடாளுமன்றம் துறைசார் மேற்பார்வை குழுவில் ஆராய எதிர்பார்த்துள்ளேன்" – என்றார்.



# மதுபானம் அருந்துவிட்டு போதையில் பாடசாலைக்கு வந்த மாணவி கைது!

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

மதுபானம் அருந்திவிட்டு பாடசாலைக்கு வந்த 14 வயதுடைய பாடசாலை மாணவியொருவர் கெக்கிராவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கெக்கிராவ கல்வி வலயத்திற்குட்பட்ட கல்லூரி ஒன்றிற்கு முன்பாக பிரதான வீதியில் போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்த கெக்கிராவ பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவர் இந்த மாணவியின் நடவடிக்கை மீது சந்தேகம் எகொண்டு அவரைக் கைது செய்துள்ளனர்.

பின்னர், அந்த மாணவி கெக்கிராவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பி.ஓ.பி.சுமித் முனசிங்கவிடம் அழைத்து வரப்பட்டு ஒப்படைக்கப்பட்ட பின்னர், மாணவியை மருத்துவ பரிசோதனைக்காக அனுராதபுரம் போதனா வைத்திய சாலையில் தாங்கள் அனுமதித்தனர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கெக்கிராவ பொலிஸார், கெக்கிராவ நீதிவான் நீதிமன்றத்தின் நன்னடத்தை அலுவலகத்திற்கு அறிவித்ததையடுத்து, சம்பவம் தொடர்பில் தனியான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கெக்கிராவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிரேஷ்ட சப் இன்ஸ்பெக்டர் சுமித் முனசிங்கவின் பணிப்புரைக்கமைய பொலிஸ் நிலைய சிறுவர் மற்றும் மகளிர் பணியகம் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த மாணவியிடம் பொலிஸார் விசாரணை நடத்திய போது மாணவியின் தாத்தாவே தன்னை மதுப் பழக்கத்திற்கு அடிமையாக்கினார் என அவர் தெரிவித்துள்ளார்.



# 25 ஆயிரம் ஏக்கர் வனப் பிரதேசம் இவ்வருடத்தில் மாத்திரம் தீக்கிரை

நிலங்களை ஆக்கிரமிப்பதற்காக திட்டமிட்ட குழுக்கள் இந்த வருடத்தில் மாத்திரம் சுமார் 25 ஆயிரம் ஏக்கர் வனங்களைத் தீக்கிரையாக்கியுள்ளன என சூழல் ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

தபோவ வனப்பகுதியில் 50ஏக்கர் வனம் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாக சூழல் ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

வறட்சியான காலப்பகுதியிலேயே இந்தக் குழுக்கள் காடுகளைத் தீக்கிரையாக்குகின்றன என நில மற்றும் விவசாய சீர்திருத்தத்திற்கான இயக்கத்தின் சஜீவ சாமிகர தெரிவித்துள்ளார்.

வலயங்களில் திட்டமிட்ட குழுக்கள் காடுகளிற்கு தீமூட்டுகின்றன அரசாங்கம் எடுத்துள்ள தவறான கொள்கைகளால் இவ்வாறான நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வருட ஆரம்பத்தில் அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி காடுகளில் உள்ள நிலங்களை 11 மாவட்டங்களைச் சேர்ந்த பொதுமக்களிற்கு வழங்குவதற்கான அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பித்தார். ஆனால் இந்த நிலங்களைப் பல்வேறு தனியார் நிறுவனங்களிற்கு வழங்கஅரசாங்கம் விரும்புகின்றது என தெரிவித்துள்ள சாமிகர அரசாங்கம் இதற்கான சூழ்நிலையை ஏற்படுத்த முயல்கின்றது எனவும் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானத்தின் பின்னரே காடுகள் தீப்பிடிக்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்

காடுகளுக்கு தீவைத்த 145 சம்பவங்கள் பெப்ரவரிக்கு பின்னர் இடம்பெற்றுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



# மீன்பிடிக்கு தடைசெய்யப்பட்ட மீனை வைத்திருந்தவர் கைது!

மீன்பிடித்துறையில் மீனவர்களால் பிடிக்கத் தடைசெய்யப்பட்ட சவுக்கு சுறா (கசமோறா) மீன்கள் 33 கிலோவை தன்வசம் வைத்திருந்த சந்தேக நபரை கடற்படையினர் கைது செய்து திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

தனது தவறை ஒப்புக்கொண்ட சந்தேக நபருக்கு திருகோணமலை பிரதான நீதிபதி இஸ்மாயில் பயாஸ் றஸாக் 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறு உத்தரவிட்டார்.

சாம்பல் தீவு,சல்லிய பிரதேசத்திலுள்ள மீன் வாடியில் வைத்தே மீன்களுடன் இந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். மீன் வள மற்றும் நீர்வள திணைக்கள திருகோணமலை மாவட்ட உதவி பணிப்பாளர் இஸார கண்காணம்கேயின் உத்தரவின் பேரில் அபிவிருத்தி உத்தியோஸ்தர் ஏ.சஜீவன், மீன்வள,நீர்வள 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் சந்தேக நபரை கைது செய்ய உதவி புரிந்தார்.

# விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கமருந்து விற்பனை செய்த நபர் மடக்கப்பட்டார்

விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கமருந்து விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் பாணந்துறை வலான ஊழல் தடுப்பு பிரிவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.


வத்தளை பொலிஸ் பிரிவில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

இந்த நபர் 38 ஆயிரம் ரூபாவுகு ஊக்க மருந்து, ஊசி மற்றும் மாத்திரைகளை விற்பனை செய்யச் சென்றவேளை கைது செய்யப்பட்டு, வத்தளை பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின்போது, தடை செய்யப்பட்ட ஊக்கமருந்துகளை இலங்கைக்குச் சட்ட விரோதமான முறையில் இறக்குமதி செய்த நிறுவனம் தொடர்பிலும் தெரியவந்துள்ளது.

அந்தத் தகவலின் அடிப்படையில், தேசிய போதைப் பொருள் கட்டுப்பாட்டு அதிகார சபையின் அதிகாரிகள் மற்றும் இலங்கை ஊக்கமருந்து எதிர்ப்பு முகவர் நிலைய அதிகாரிகள் பொரளை பகுதியில் சுற்றிவளைப்பு நடத்தி மற்றுமொருவரை கைது செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.




கசூரினா
படகுச் சேவை
சேவைகள்
01. மூன்று கிலோ மீற்றர் தூரம் சுற்றிப் பார்த்தல்
02. பவளப் பாறைகள் சுற்றிப் பார்த்தல்
03. வெளிச்சவீட்டு கடற்பகுதியைச் சுற்றிப் பார்த்தல்
04. பருத்தித்தீவு சென்று வருதல்
05. நயினாதீவு சென்று வருதல்
06. காரைநகர் கடற்கோட்டையைச் சுற்றிப் பார்த்தல்
காரைநகர் கசூரினா கடலில் கண்ணாடி இழைப்படகில் பயணித்தவாறே கடலின் அடியில் பவளப்பாறைகள் மற்றும் மீன் இனங்களை கண்டு ரசிக்கக் கூடிய விதத்தில் கண்ணாடி பொருத்தப்பட்ட படகுகள் இன்னும் சில வாரங்களில் எம்மால் சேவையில் ஈடுபடுத்தப்படவிருக்கின்றன.
கசூரினா படகுச்சேவை தொடர்புகளுக்கு : 077 078 3949